# டிரினிடி மகளிர் கல்லூரி

நாமக்கல்-637001

2021–2022 ஆம் கல்வியாண்டு( இரட்டைப் பருவம்)

இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

பாடம் : நன்னூல் (சொல்லதிகாரம்)

(21UTA03)

தலைப்பு : ஆகுபெயர்


வழங்குபவர் :

முனைவர். பா.விஷ்ணுபிரியா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

http://www.trinitycollegenkl.edu.in/

# ஆகுபெயர்

(METONOMY (OR) TRANSFERRED NONUN)

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகபெயர் எனப்படும்.

## ஆகுபெயரின் இலக்கணமும் வகையும் (12)

**பொருள்முதல் ஆறோடு அளவை சொல் தானி**
**கருவி10 காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரால் அதற்கு இயை பிறிவைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே**

(இ-ள்) பொருள். இடம். காலம். சினை. குணம் தொழில், அளவு, சொல், தானி, கருவி, காரியம், கருத்தா, முதலான பொருள்களுள் ஒரு பொருளின் இயற்கைப் பெயரால் அப்பொருளுக்குத் தொடர்புடை வேறொரு பொருளைத் தொன்மையாக வரும் முறைப்படி உரைப்பன ஆகுபெயர்களாகும்.

**சினையாகு பெயர்**

வெற்றிலை நட்டான் - இலையாகிய சினையின் பெயர் முதலாகிய கொடிக்கு ஆகியது.

**பண்பாகுபெயர்**

கார் நிகர்கை - கார் என்னும் நிறப்பண்புப் பெயர் அப்பண்பை உடைய மேகத்திற்கு ஆகியது.

**தொழிலாகு பெயர்**

வற்றலொடு உண்டான் - வற்றல் என்னும் தொழிற்பெயர் அதனை உடைய உணவுப் பொருளுக்கு ஆகியது.

**அளவாகு பெயர்:**

(எண்ணல்) ஒன்றிரண்டு கொடு - ஒன்று, இரண்டு என்பது ஒன்று இரண்டு என்னும் பணத்திற்கு ஆகியது.

**எடுத்தல்**

ஒரு பலம் கொடு - பலம் என்னும் நிறுத்தல் அளவைப் பெயர் அவ்வளவு உடைய பொருளுக்கு ஆகியது.

**முகத்தல்**

நாழி கொடு - நாழி என்னும் முகத்தல் அளவைப்பெயர் அவ்வளவுடைய பொருளுக்கு ஆகியது.

**நீட்டல்**

கீழைத்தடி - தடி என்னும் நீட்டல் அளவைப் பெயர் அதனால் அளக்கப்பட்ட விளைநிலத்திற்கு ஆகியது

## சொல்லாகு பெயர்

நூற்கு உரை செய்தான் - உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகியது.

## தானியாகு பெயர்

கழல் தொட்டான் - கழல் என்பது அது பொருந்துவதற்குரிய இடமாகிய (தானமாகிய) காலுக்கு ஆகியது

(அதவாது இடத்து நிகழ் பொருட்பெயர் இடத்திற்கு ஆதல்)

**கருவியாகு பெயர் :**

திருவாசகம் படி - வாசகம் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலுக்கு ஆகியது

**காரியவாகு பெயர்**

இது அலங்காரம் - அலங்காரம் என்னும் காரியப் பெயர் அதற்குக் காரணமாகிய நூலுக்கு ஆகியது.

**கருத்தாவாகு பெயர்**

கம்பரைப் படி - கம்பர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆகியது

## உவமையாகு பெயர்

பாவை வந்தாள் - பாவை என்னும் பொருளின் பெயர் அது போன்ற தன்மை பெற்ற பெண்ணுக்கு ஆகியது.

## இருமடியாகு பெயர்

புளி காய்த்தது - புளி என்னும் பெயர் சுவைக்காகிப் பின் மரத்திற்கு ஆகி இருமுறை மடிந்து வந்தது

## மும்மடியாகுப் பெயர்

கார் அறுத்தான் - கார் என்னும் பெயர் முதலில் மேகம் பின் கார்காலம், அதன் பின் அப்பருவத்தில் விளையும் நெல் என மூன்று முறை மடிந்து வந்தது.

நன்றி